ஶ்ரீ:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாத$_2$ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத$_3$ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித$_4$த்தாம் ஸத$_3$ா ஹ்ருதி$_3$ ॥

## அத்திப்பட்டு ஶ்ரீமத் அழகியசிங்கர் அருளிச்செய்த

# ॥ ஶ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து ॥

*This document*[*] *has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

[*]This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் அடைக்கலப்பத்து ॥

லக்ஷ்மீந்ருஸிம்ஹ மநுசிந்த்ய த$_{3}$யாம்பு$_{3}$ராஶிம்
    லக்ஷ்மீம் தத$_{3}$ங்க ஸரஸீருஹ ராஜஹம்ஸீம் ।
லக்ஷீசகார நரஸிம்ஹபத$_{3}$ப்ரபத்திம்
    யஸ்தம் ஶட$_{2}$ாரியதிராஜமஹம் தமீடே$_{3}$ ॥

திருமந்திரத் திருப்பதியாம் திருமதுராந்தக நகருள்⋆
    உருவம் தரி அரங்கேசச் சடகோபன் தனி அருளால்⋆
திருமந்திர உரை சுரந்த சடகோப யதிபதி செய்⋆
    திரு வந்துறை மடி உடையான் அடைக்கலப் பத்திதுவேயாம்

‡மாமலராள் மன்னி உறை⋆ மடி உடையான் மஞ்சுறையும்⋆
    மாமலையில் தனி இலகும்⋆ மாகுருவாய் மநுவரத்தை⋆
மாமறையோர் வானவர்க்கும்⋆ வழங்கி அருள் மாமுனியாம்⋆
    மாமதி சேர் நரசிங்கன்⋆ மலர் அடியை மன்னினனே (1)

பேர் வலி சேர் பொன் பெயரோன்⋆ பேர் உடலைப் பிளந்துகிரால்⋆
    நார் கிழிப்பாரது போல⋆ நன்றாகக் கிழித்திட்டுச்⋆
சார்வளை சேர் இந்திரையும்⋆ தானும் உறை நரசிங்கன்⋆
    பார் புகழும் அடி மலரைப்⋆ பணிந்திட்டுப் பாங்கினனே (2)

மறையோனும் மாமதி சேர்⋆ மறு சடையன் இந்திரனும்⋆
    மறை முனிவருடன் வந்து⋆ மலர் அதனால் இறைஞ்சி நிற்கக்⋆
குறை முனிவர் அரம்பையரும்⋆ கூடி மறை பாடி நிற்க⋆
    நறை மலராளுடன் உறையும்⋆ நம்குருவை அடைந்தேனே (3)

கொள்ளி எழு கோள் அவுணன்⋆ குடல் அலறப் பாய்ந்திட்டுத்⋆
    தள்ளி அவன் தலை காலைத்⋆ தனித் தனியே பிரித்திட்டும்⋆
அள்ளி அவன் உதிரத்தை⋆ ஆசையுடன் உண்ட பிரான்⋆
    வெள்ளி அலர் உதிரக்கை⋆ வேண்டி வந்து பணிந்தேனே (4)

www.prapatti.com

காரணமாய்க் காரியமாய்⋆ கண்டிடும் இவ்வுலகத்தில்⋆
பூரணமாய் உறைகின்ற⋆ புண்ணியனாம் இவன் என்று⋆
நாரணன் தன் மெய் உருவம்⋆ இதுவே என்றனைவர்க்கும்⋆
சீர் அணிந்து வெளி நின்ற⋆ சிங்ககுரு அடைந்தேனே (5)

‡இங்குளன் அங்குளன் அல்லன்⋆ என்றுரைக்கக் கூடாமே⋆
எங்கும் உளன் என் கண்ணன்⋆ என்றுரைத்த தன் மகனைக்⋆
குங்குமம் போல் சிவந்த கண்ணன்⋆ குருட்டவுணன் உதைத்திட்ட⋆
சங்கணி தூண் பிளந்த பிரான்⋆ சதிரடியை அடைந்தேனே (6)

ஓர் உருவே ஈர் உருவாம்⋆ என் தனக்குள் கண்ணுடைய⋆
சீர் உருவைச் சிந்தை உளர்⋆ சிந்தியுங்கள் எனத் திகழும்⋆
பேர் உருவ இரணியனைப்⋆ பிணம் படவே கிழித்துகந்த⋆
ஆர் உருவன் நரசிங்கன்⋆ அடியன்றி மற்றிலனே (7)

அஞ்சிறை சேர் அணி பறவை⋆ அணைந்திட்ட வடிவுடையான்⋆
அஞ்சிரம் சேர் மணியனந்தன்⋆ ஆடியிடு மணி முடியான்⋆
அஞ்சுருவ அவுணன் உடல்⋆ அஞ்சாறாய்ப் பிளந்திட்ட⋆
நஞ்சுருவன் எம் பெருமான்⋆ தமியேன் உள் கலந்தானே (8)

ஆறும் அவன் பயனும் அவன்⋆ அனைத்துலகும் அவனேயாம்⋆
நாறு துழாய் நரசிங்கன்⋆ நல்ல மறையுளம் இதுவே⋆
கூறு மதி சேரும்⋆ குணம் உடைய வெண்மதியோர்⋆
கூறுகின்றார் இப்படியே⋆ குணம் இதுவே வேதியர்க்கே (9)

‡பத்துருவாய் உலகளித்த⋆ பரமன் உரு ஒன்பதையும்⋆
பத்துருவாய்ப் பணிந்து நின்ற⋆ பரமகுரு தனி அருளால்⋆
பத்துருவாம் நரசிங்கன்⋆ பதக்கமலம் பற்று முறை⋆
பத்துருவாம் பாட்டுரைத்துப்⋆ பரமபதம் பணிந்தேனே (10)

‡அனைத்துலகும் வாழ வந்த⋆ ஆதி நரசிங்கன் அடி⋆
தினைத்தனையுமறவாத⋆ சிந்தை உள்ள சடகோபன்⋆
தனத்துறையும் உடையவரும்⋆ தாங்கும் உரை மாமுனிவன்⋆
மனத்துவைப்பார் ஈர் ஐந்தும்⋆ மன் வாழ்வார் இவ்வுலகே (11)

॥ அத்திப்பட்டு ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவடிகளே சரணம் ॥



www.prapatti.com